

உலக தரத்தில் விளையாட்டு வீரர்களை, உருவாக்கிட வேண்டும் என்ற உன்னத முனைப்பில் அயராது உழைத்திடும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கரூர் மாவட்ட பள்ளி கல்வித்துறை சார்பில், கரூர் வருவாய் மாவட்ட அளவிலான பள்ளி மாணவ, மாணவிகளுக்கான குடியரசு தின தடகளப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவச் செல்வங்களுக்கு, கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., பரிசு வழங்கி வாழ்த்தினார்.



தமிழ்நாடு மாவட்டம், திருமானூர் ஊராட்சியில் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி மற்றும் பலர் உள்ளனர்.

### உடுமலைப்பேட்டை - மடத்துக்குளத்திற்குட்பட்ட பாலக்காடு கோட்டத்தில்

# முக்கிய ரயில்வே கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும்!

## இரயில்வே பொது மேலாளரிடம் கே.ஈஸ்வரசாமி எம்.பி. கோரிக்கை!

திருப்பூர், அக். 18 - உடுமலைப்பேட்டை - மடத்துக்குளத்திற்குட்பட்ட பாலக்காடு கோட்டத்தில் முக்கிய ரயில்வே கோரிக்கைகளை நிறைவேற்றி தர சென்னை தெற்கு ரயில்வே பொது மேலாளரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி கோரிக்கை வைத்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு :- திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள உடுமலைப்பேட்டை ரயில் நிலையத்தை உடுமலைப்பேட்டை மற்றும் மடத்துக்குளம் ஆகிய 2 தாலுகாக்களை சேர்ந்தவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள மடத்துக்குளம் ரயில் நிலையம் எம்.டி.கே. எம்.,யை மடத்துக்குளத்தைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.



ஆனைமலை மாசாணி அம்மன் கோவில், திருமூர்த்தி மலைக்கோயில், வால்பாறை மலைகள், ஆனைமலை புலிகள் காப்பகம் (ATR), அமராவதி & ஆழியார் அணைகள் பூங்கா போன்ற பல சுற்றுலா ஆன்மிக இடங்கள் அருகிலுள்ள பொள்ளாச்சி & உடுமலைப்பேட்டை பகுதிகளில் அமைந்துள்ளன. தெற்கு ரயில்வேயின் மதுரை கோட்டத்தில் திண்டுக்கல் - பழனி - உடுமலைப்பேட்டை - பொள்ளாச்சி பிரிவில் அமைந்துள்ள பழனிக்கு லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். உலகப் புகழ்பெற்ற சுற்றுலா மலை ஸ்தலமான கொடைக்கானலுக்கு அருகில் உள்ள ரயில் நிலையமாக பழனி விளங்குகிறது. உடுமலைப்பேட்டை ரயில் நிலையம் கேரளாவில் உள்ள மூணாறு மலை வாசஸ்தலத்திற்கு செல்லும் ரயில் நிலையமாகும்.

பொள்ளாச்சி - உடுமலைப்பேட்டை - பழனி இடையே சென்னை - தாம்பரம் - எழும்பூர் இடையே நேரடி ரயில் சேவை இல்லை. உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான அரசு மற்றும் தனியார் ஊழியர்கள் குறிப்பாக தென் சென்னையில் சென்னை - தாம்பரம் மற்றும் செங்கல்பட்டு பகுதிகளில் பணியாற்றுகின்றனர்.

பொள்ளாச்சி - உடுமலைப்பேட்டை - பழனி மற்றும் சேலம் வழியாகச் செல்லும் தற்போதைய ரயில் சேவை 22651/22652 (பாலக்காடு - சென்னை சூப்பர் ஃபாஸ்ட் டெய்லி எக்ஸ்பிரஸ் ரயில்) நமது பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பழனி பகுதிகளைச் சேர்ந்த சென்னை பயணிகளின் அதிக தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை என்பதை நினைவில் கொள்க. தற்போது, பொள்ளாச்சி - உடுமலைப்பேட்டை - பழனி மற்றும் மேட்டுப்பாளையம் இடையே நேரடி தினசரி வழக்கமான பயணிகள் ரயில்கள் இல்லை. மேட்டுப்பாளையம் உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான ஊட்டிக்கு ரயில் நிலையமாகச் செயல்படுகிறது. பொது மக்களின் நலன் கருதி கீழ்க்கண்ட ரயில்களை (ஏற்கனவே ரயில்வே வாரியத்தால் அங்கீகரிக் கப்பட்டவை) உடனடியாக இயக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருவனந்தபுரம் - மதுரை இடையே இயக்கப் பட்டு வந்த அமிர்தா விரைவு ரயில் வியாழக்கிழமை (அக்டோபர் 16) முதல் ராமேசுவரம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ரயிலை போத்தனூர் வழித்தடத்தில் இயக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. கோவையில் இருந்து மீட்டர்கேஜ் ரயில் பாதையாக இருந்த போது, கோவை - ராமேசுவரம், கோவை - போடிநாயக்கனூர், கோவை - தூத்துக்குடி, கோவை - கொல்லம் இடையே தினசரி ரயில்கள் இயக்கப்பட்டன. போத்தனூர் - திண்டுக்கல் இடையே மீட்டர்கேஜ் பாதை, அகல ரயில் பாதையாக மாற்றும் பணிக்காக இந்த ரயில்களின் சேவை நிறுத்தப்பட்டன. அதன் பிறகு, அகல ரயில் பாதைப் பணிகள் நிறைவடைந்தும், இந்த ரயில்கள் மீண்டும் இயக்கப்படவில்லை. இந்நிலையில், பெங்களூரு - கோவை இடையே இயக்கப்பட்டு வந்த இன்டர்சிட்டி ரயிலை எர்ணாகுளம் வரை நீட்டிக்க சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் அறிவித்தபோது, கோவையில் உள்ள ரயில் பயணிகள் சங்கத்தினர், தொழில் அமைப்பினர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அப்போது, பெங்களூரு- கோவை இன்டர்சிட்டி ரயிலை எர்ணாகுளம் வரை நீட்டித்தால், அந்த காலகட்டத்தில் பாலக்காடு - மதுரை இடையே இயங்கி வந்த அமிர்தா விரைவு ரயிலை கோவை வழித்தடத்தில் இயக்குவதாக பாலக்காடு ரயில்வே கோட்டம் சார்பில் உறுதியளிக்கப்பட்டது.

இதையடுத்து, பெங்களூரு - கோவை இன்டர்சிட்டி ரயில் எர்ணாகுளம் வரை நீட்டிக்கப்பட்டது. ஆனால், பாலக்காடு - மதுரை ரயில் கோவை வழியாக இயக்கப்படவில்லை. தற்போது, அந்த ரயில் திருவனந்தபுரம் - மதுரை வரை நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், திருவனந்தபுரம் - மதுரை அமிர்தா விரைவு ரயில் (எண்: 16343) வியாழக்கிழமை (அக்டோபர் 16) முதல் திருவனந்தபுரம் - ராமேசுவரம் வரை நீட்டித்து இயக்கப்படுவதாக ரயில்வே நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அக்டோபர் 16-ஆம் தேதி முதல் நாள்தோறும் இரவு 8.30 மணிக்கு திருவனந்தபுரத்தில் இருந்து புறப்படும் திருவனந்தபுரம் - ராமேசுவரம் விரைவு ரயிலானது கொல்லம், செங்கண்ணூர், கோட்டயம், திருச்சூர், பாலக்காடு, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பழனி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், மதுரை, மானாமதுரை, பரமக்குடி, ராமநாதபுரம் வழியாக மறுநாள் நண்பகல் 12.45 மணிக்கு ராமேசுவரத்தை சென்றடையும்.

மறு மார்க்கமாக ராமேசுவரத்தில் இருந்து அக்டோபர் 17-ஆம் தேதி முதல் நாள் தோறும் பிற்பகல் 1.30 மணிக்குப் புறப்படும் ராமேசுவரம் - திருவனந்தபுரம் அமிர்தா விரைவு ரயில் (எண்: 16344) மறுநாள் காலை 4.55 மணிக்கு திருவனந்தபுரத்தை சென்றடையும் என தெற்கு ரயில்வே கோட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவனந்தபுரம் - மதுரை ரயில் ராமேசுவரம் வரை நீட்டிக்கப் பட்டுள்ளது மகிழ்ச்சி அளித்தாலும், கோவை அல்லது போத்தனூர் வழியாக அமிர்தா ரயில் இயக்கப்படும் என நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்த பயணிகளுக்கு ஏமாற்றம் அளிக்கிறது. கோவையில் இருந்து திருவனந்தபுரத்துக்கு நேரடி ரயில் இல்லாத நிலையில், கோவை மக்கள் ராமேசுவரத்துக்கு எளிதாகச் செல்லும் நிலையில், திருவனந்தபுரம் - ராமேசுவரம் அமிர்தா ரயிலை போத்தனூர் வழித்தடத்தில் இயக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.



மழைக்காலம் தொடங்குவதை ஒட்டி ஓசூர் மாநகராட்சி 17வது வார்டிற்குட்பட்ட ராமையா நகர், எம்.எம் நகர்,பகுதிகளில் கழிவுநீர் , தெருவிளக்கு, ஆகியவற்றை ஓசூர் மாநகர மேயர் சத்யா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் . கழிவுநீர் கால்வாய், தெருவிளக்கு, சாலை வசதி பிரச்சனைகள் குறித்து அப்பகுதி மக்களின் குறைகளையும் கேட்டறிந்தார். இந்நிகழ்வில் மண்டல தலைவர் ரவி, மாமன்ற உறுப்பினர் நாகராஜ், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்திக், பேட்ரிக் மற்றும் பொதுமக்கள் உடன் இருந்தனர்.



நாகை மாவட்டம் – திருக்குவளை மேற்கு ஒன்றிய திமுக நிர்வாகிகள், பாக முகவர்கள், வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் கலந்துரையாடல் கூட்டம் திருக்குவளை சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் அ.பாரிபாலன் சிறப்புரை ஆற்றினார். உடன் சோ.பா. மலர்வண்ணன், கோ சிவகுமார், ரெக்ஸ், டி.எஸ்.அசோக்குமார், எஸ்.ஆர்.பார்த்திபன், ஜெயந்திமாசிலாமணி ஆகியோர் உள்ளனர்.

### டெல்டா மாவட்டங்கள் - டெல்டா அல்லாத மாவட்டங்களில் 2025-26-ஆம் ஆண்டில்

# நெல் சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு அரசாணை வெளியீடு!

## சட்டப்பேரவையில் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் கேள்விக்கு - உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி பதில்!

சென்னை, அக். 18 - சட்டப்பேரவையில் ஆற்காடு தொகுதி உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், நெல் சேமிப்பு கிடங்கு அமைக்க வேண்டி கேள்வி எழுப்பியதற்கு உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பதிலளிக்கையில் தமிழகத்தில் டெல்டா மாவட்டங்கள், டெல்டா அல்லாத மாவட்டங்களில் நெல் சேமிப்பு கிடங்குகள் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

இது பற்றிய விவாதம் வருமாறு:-

ஆற்காடு தொகுதி, நம்பரை ஊராட்சி, மோகனாவரம் மற்றும் விலாரி ஆகிய கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் அர. சக்கரபாணி:** தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

ஆம். வருகின்ற பருவத்தில் நெல் விளைச்சல் அடிப்படையில் நம்பரை ஊராட்சியில், மோகனாவரம் மற்றும் விலாரி கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை விரைவில் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**ஜெ.எல்.ஈஸ்வரப்பன்:** நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் மட்டுமே நெல் கொள்முதல் செய்யும் நிலையை அடையச் செய்து, விவசாயிகளின் பாதுகாவலராகத் திகழும் முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கும் விவசாயிகளின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆற்காடு தொகுதி விவசாயத்தை வாழ்வதாரமாகக் கொண்ட விவசாய மக்கள்தொகை வசிக்கும் 99 ஊராட்சிகளை உள்ளடக்கிய தொகுதி. ஆகவே, திமிரி ஒன்றியத்தில் தாமரைப்பாக்கம், பழையனூர், விளம்பி, நம்பரை, ஆற்காடு ஒன்றியத்தில் சக்கரமல்லூர், பாப்பேரி, அரும்பாக்கம், கீழ்வேளூர், கணியம்பாடி ஒன்றியத்தில் வஞ்சிக்கொண்டாபுரம், கத்தாழம்பட்டு ஆகிய ஊராட்சிகளில் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்து நெல்லைப் பாதுகாத்து சேமிக்க, 200 டன் கொள்முதல் கொண்ட சிறிய சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?.

**அமைச்சர் அர. சக்கரபாணி:** உறுப்பினர் அவர்கள் நேரடி கொள்முதல் நிலையங்கள் புதிதாக கட்டப்பட வேண்டுமென்றும், அத்துடன் 200 மெட்ரிக் டன் அளவிலான சேமிப்புக் கிடங்கும் கட்டப்பட வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார். உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, அங்கே நெல் விளைச்சலைப் பொறுத்து, எங்கெங்கெல்லாம் நெல் சேமிப்புக் கிடங்கு கட்ட வேண்டுமோ, அங்கெல்லாம் உரிய நடவடிக்கை எடுத்து, வருகின்ற காலங்களில் கண்டிப்பாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கெங்கெல்லாம் நெல் சேமிப்புக் கிடங்குகள் கட்ட வேண்டுமோ அங்கெல்லாம் கட்ட உரிய நடவடிக்கை எடுத்து வருகின்ற இந்நேரத்தில், அதை நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**J.L. ஈஸ்வரப்பன்:** ஆற்காடு தொகுதியில் கொள்முதல் செய்யப்படும் நெல்லை சேமிக்க 15,000 டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு அமைக்க வளையாத்தூர் ஊராட்சி, வரதராஜபுரம் கிராமத்தில் 5 ஏக்கர் இடம் உள்ளதால், அங்கு சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் அர. சக்கரபாணி:** ஏற்கெனவே, முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு தமிழகத்திலே டெல்டா மாவட்டங்கள் மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் நெல் சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு 2025-2026 ஆம் ஆண்டிலே அரசாணை வெளியிடப்பட்டு ஒப்பந்தப்புள்ளியெல்லாம் கோரப்பட்டு விட்டது. உறுப்பினர் அவர்கள் புதிதாக 15,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு அமைக்க சுமார் 5 ஏக்கர் இடம் இருக்கிறது என்று சொல்கிறார்.

முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, நிதிநிலைக்கேற்ப தேவை ஏற்படும்பட்சத்தில் வருகின்ற ஆண்டு நிச்சயமாக அங்கே சேமிப்புக் கிடங்கு கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அந்தியூர் மற்றும் கோபி வருவாய் வட்டாரங்களில் வழங்கப்பட்டுள்ள விவசாய நிபந்தனை பட்டாக்களின் நிபந்தனைகளை நீக்கிடக் கோரி முதற்கட்டமாக அந்தியூர் சட்டமன்றத் தொகுதி மைக்கேல் பாளையம் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் பூர்த்தி செய்யப்பட்ட மனுக்களை ஏ.ஜி.வெங்கடாசலம் எம்.எல்.ஏ. பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார். நிகழ்வில் சரவணன், குருசாமி, ஆஷா.நாகராஜா, கவின் பிரசாத், செந்தில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஒரத்தநாடு மு.காந்தி

### அக்டோபர் 18 (2020)



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், ஒன்றிய துணைச்செயலாளர் என படிப்படியாக பொறுப்பு வகித்து 2014 முதல் தனது இறுதிகாலம் வரை ஒரத்தநாடு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

புதூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – ஒரத்தநாடு ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

“கொம்பு சீவி விட்ட காளை போல் சீறிப் பாய்ந்து கழகப் பணியாற்றியதால், கழகத் தொண்டர்களின் பேரன்பைப் பெற்றவராக திகழ்ந்தார்” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, அதனை முன்னெடுத்து சிறப்பாக நடத்திக் காட்டியவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

## வீரபாண்டிய கட்டபொம்மனின் தியாகம்

# தமிழ்மண்ணின் தன்மான உணர்வுக்குச் சான்றாகும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, அக். 18 -

விடுதலை நாயகர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களது நினைவு நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**அந்நிய ஆதிக்கத்துக்கு அடி பணிந்து வரிகட்ட மறுத்து, அஞ்சா நெஞ்சனாகப் போர் நடத்திய விடுதலை நாயகர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களது நினைவு நாள்!**

**சிப்பாய்ப் புரட்சிக்குப் பல ஆண்டுகள் முன்னரே விடுதலைப் போராட்ட உணர்வைப் பரவச் செய்து, உறுதி குலையாமல் போராடி உயிர் துறந்த பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக் காரராம் கட்டபொம்மனின் தியாகம் தமிழ் மண்ணின் தன்மான உணர்வுக்குச் சான்றாக என்றும் போற்றப் படும்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## சட்டபூர்வமான நடவடிக்கைகள் என்பதையும் கடந்து

# அரசு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் திட்டமிட்டுள்ளது!

### சட்டப்பேரவையில் சிறுநீரக முறைகேடு தொடர்பான கவன ஈர்ப்பு - அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!



சென்னை, அக்.18 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் சட்டப்பேரவையில் சிறுநீரக முறைகேடு தொடர்பாக கொண்டுவரப்பட்ட அரசின் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது பதில் அளித்தார்

சிறுநீரக முறைகேடு நடைபெற்றது தொடர்பாக அரசின் கவனத்தினை ஈர்த்து அமர்ந்திருக்கிறார்கள். இதற்காக விரிவான விளக்கமான பதிலை இந்த அவையில் பதிய உள்ளேன். 16.7.2025 அன்று தொலைக்காட்சி செய்தியில் சிறுநீரக முறைகேடு நடப்பதாக வரப்பெற்ற புகார் குறித்து, தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மரு.எஸ்.வினீத், இ.ஆ.ப. அவர்கள் விரிவான விசாரணை மேற்கொண்டு, அறிக்கையினை அரசுக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் அவர்கள் தலைமையில், இணை இயக்குநர் (சட்டம்), மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், பெரம்பலூர் (ம) அரியலூர் இணை இயக்குநர் நலப்பணிகள் உள்ளிட்ட மாநில ஆய்வுக் குழுவினர் மேற்பார்வையில் 17.07.2025 முதல் நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் மற்றும் திருச்சி பகுதிகளில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில், திருச்சி சிதார் மருத்துவமனை மற்றும் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய வழங்கப்பட்ட உரிமங்கள், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரால் 23.07.2025ல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

மேலும், விசாரணை அலுவலர், மேற்கூறிய மருத்துவமனைகளில் தவறான முறையில் சான்றுகள் சமர்ப்பித்து மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது என்றும், மேலும் இவ்விசாரணையில் மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்ட நுணுக்கங்களை தவறாக பயன்படுத்தியதும் தெரிய வருவதாக தெரிவித்துள்ளார். மேற்படி விசாரணையின் மூலம் அங்கீகாரக் குழுவிற்கு கீழ்க்கண்ட பரிந்துரைகளை திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் வழங்கியுள்ளார். மனித உறுப்பு மாற்றுச் சட்டம், 1994ன்படி சிறுநீரகம் மாற்றுதல் தொடர்பாக ஆவணங்களின் ஆய்வின் போது சிதார் மருத்துவமனை மற்றும் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலிருந்து பரிசீலனை செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், இவ்விரு மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்ட சிறுநீரக உறுப்பு மாற்று உரிமச் சான்றிதழை இரத்து செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டது.

இந்த சிறுநீரக முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாக கண்டறியப்பட்ட இடைத்தரகர்களான ஸ்டான்லி மோகன் மற்றும் ஆனந்தன் ஆகிய இருவர் மீதும் BNS 2023ன் உரிய பிரிவுகள் கீழ் FIR பதிவு செய்ய பரிந்துரை செய்யப்பட்டது. மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம், 1994ன்படி செய்யப்படும் அறுவை சிகிச்சைகள் தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் மருத்துவ சட்டரீதியானவை (Medico Legal) என்பதால் பத்தாண்டு வரை ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக வருவாய் துறை, காவல் துறை மற்றும் மருத்துவத் துறைகளுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட வேண்டும். அனைத்து படிவங்களும் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளின் வடிவில் வைத்திருக்க பரிந்துரை செய்யப்படுகிறது.

மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள உள்ள ஏற்பாளர்களுக்கும் மற்றும் கொடையாளிகளுக்கும் அறுவை சிகிச்சைக்கு முன் தகுந்த ஆலோசனைகள் குறித்த நிலையான இயக்க நடைமுறைகள் (Standard Operating Procedures) உருவாக்கி செயல்படுத்தப்பட வேண்டும். ஏற்பாளர்கள் நேரடியாக அங்கீகார குழுவிற்கு முன்பாக ஆஜராக முடியாத பட்சத்தில் காணொளி மூலமாக கலந்தாய்வு செய்யப்பட வேண்டும். இனிவரும் காலங்களில் வீடியோ பதிவேற்பு முறையாக செயல்படுத்தப்பட வேண்டும்.

தற்போது மாநில அளவில் சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள மருத்துவக் கல்வி இயக்ககம் மற்றும் ஆராய்ச்சி அலுவலகம், மதுரை ராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய நான்கு இடங்களிலும் மனித உறுப்பு மாற்று அங்கீகாரக் குழு (Human Organ Transplant Authorization Committee) செயல்பட்டு வருகிறது. ஏற்கனவே செயல்பட்டு வருகிற சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்வி இயக்ககம் மற்றும் ஆராய்ச்சி அலுவலகத்தின் அங்கீகார குழுவினை மறுசீரமைப்பு செய்து சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அங்கீகாரக் குழு அமைத்து மாற்றம் செய்யவும் மற்றும் சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தில் உள்/ வெளிநாடுகளிலிருந்து சிகிச்சைபெற வரும் நோயாளிகளுக்கு மட்டுமான அங்கீகார குழுவாக செயல்பட இதன்மூலம் பரிந்துரை செய்யப்படுகிறது. மாநிலம் முழுவதுமுள்ள அங்கீகாரக் குழுக்களுக்கும் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் அவர்கள் கண்காணிப்புக் குழு தலைவராக நியமனம் செய்யப்படவேண்டும். மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்களின் தலைமையின் கீழ் வருடத்தில் இரு முறை மனித உறுப்பு மாற்று அங்கீகாரக் குழுவின் மூலம் ஒப்பளிக்கப்பட்ட / நிராகரிக்கப்பட்ட அனைத்து விவரங்களை தணிக்கை செய்யவும் மற்றும் ஆய்வு நடத்தி ஆய்வு அறிக்கை தயார் செய்து ஆண்டு அறிக்கையாக அரசிற்கு சமர்ப்பிக்க இதன் மூலம் பரிந்துரை செய்யப்படுகிறது.

**அனைத்து மாவட்டங்களிலும் உடல் உறுப்பு தானம்!**

அனைத்து மாவட்டங்களிலும் உடல் உறுப்பு தானம் என்ற பெயரில் உடல் உறுப்பை முறைகேடாக விற்பது தவறான செயல் என்பது குறித்து தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்திட அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு பரிந்துரை செய்யப்படுகிறது என்று 10 விதமான பரிந்துரைகளை இந்தக் குழு வைத்தது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநரின் பரிந்துரைகளை பரிசீலித்த அரசு, சிதார் மருத்துவமனை மற்றும் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி ஆகிய இரு மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்ட சிறுநீரக உறுப்பு மாற்று உரிமச் சான்றிதழ் இரத்து செய்யப்பட்டது. இதில் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது, பாரபட்சம் எதுவுமில்லாமல், எந்தவிதமான பாகுபாடு இல்லாமல் எந்த மருத்துவமனைகளின் மீது புகார் வந்ததோ அந்த மருத்துவமனைகளின் உரிமங்கள் உடனடியாக இரத்து செய்யப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது அவர் எடுத்து சொன்னதுபோல இந்த மாதிரியான புகார்கள் நாமக்கல் பள்ளிப்பாளையம், திருச்சிசட்டமன்ற உறுப்பினர் அருள் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல சேலம் பகுதிகளிலும் சிறுநீரக விற்பனை என்பது 5 இலட்சம், 10 இலட்சத்திற்கு விற்பனை செய்கிறார்கள் என்று, இதுபோன்ற செயல்கள் இப்போது மட்டுமல்ல கடந்த காலங்களிலும் நடைபெற்றிருக்கிறது. அப்போது இருந்த அரசு இது சம்பந்தமாக புதிய விதிமுறைகளையோ, எந்தவிதமான சட்டப்பூர்வ நடவடிக்கைகளையோ எடுக்காமல் இருந்தது என்பதை இந்த சட்டமன்றத்திற்கு பல்வேறு வகைகளில் நான் பதிவு செய்ய முடியும். 2017 ஆம் ஆண்டு நாமக்கல் மாவட்டத்தின் காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள் மருத்துவத்துறைக்கு இங்கே இதுபோன்ற செயல்கள் நடைபெற்று வருகிறது என்று அதிகாரபூர்வமாக அனுப்பிய பல்வேறு ஆவணங்கள் இன்றளவும் நடைமுறைக்கு வராமல் இருந்தது. ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எந்த மருத்துவமனையாக இருந்தாலும் அது யாருடையதாக இருந்தாலும் உடனடியாக சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்திய காரணத்தினால் இன்றைக்கு அந்த இரு மருத்துவமனைகளும் உடலுறுப்பு மாற்று உரிமைச் சான்றிதழ்கள் இரத்து செய்யப்பட்டது.

இந்த சிறுநீரக முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாக கண்டறியப்பட்ட இடைத்தரகர்களான ஸ்டான்லி மோகன் மற்றும் ஆனந்தன் ஆகிய இருவர் மீதும் குற்றவியல் நடவடிக்கை தொடரப்பட்டு கைது செய்யப்பட்டனர். மேற்கண்ட பரிந்துரைகளின் மீது தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இதன் அடிப்படையில், மருத்துவக் கல்வி இயக்குநர் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து, அனைத்து அங்கீகாரக் குழுக்களும் அவற்றை தவறாமல் கடைபிடிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, அரசாணை(நிலை) எண். 396, நாள் 08.09.2025இன்படி, மாவட்ட அங்கீகாரக் குழுக்கள் மறுசீரமைக்கப்பட்டு, தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட மருத்துவமனையிலிருந்து பெறப்படும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு காத்திருக்கும் வெளிநாட்டு நபர்களின் விண்ணப்பங்களை பரிசீலித்து, ஏற்க வேண்டுமா, மறுக்க வேண்டுமா என்பதை தீர்மானிப்பதற்காக, சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள மருத்துவக் கல்வி இயக்ககம் மற்றும் ஆராய்ச்சி அலுவலகத்தில் மாநில அளவிலான அங்கீகாரக் குழு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, வடக்கு மாவட்ட அங்கீகாரக் குழு சென்னையை தலைமையிடமாகக் கொண்டும், மத்திய மாவட்ட அங்கீகாரக் குழு தஞ்சாவூரை தலைமையிடமாகக் கொண்டும், மேற்கு மாவட்ட அங்கீகாரக் குழு கோவையை தலைமையிடமாகக் கொண்டும், தெற்கு மாவட்ட அங்கீகாரக் குழு மதுரையை தலைமையிடமாகக் கொண்டும் அமைக்கப்பட்டு, உறுப்பு மாற்ற செயலில் உள்ள அம்சங்களைப் பற்றியும், அறுவை சிகிச்சைக்கு முன்னரும் பின்னருமான பராமரிப்பிற்கான வழிகாட்டல்களையும் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை, 25.08.2025 தேதியிட்ட உத்தரவின்படி, ஒரு சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைக்கப்பட்டு, மேற்படி சிறப்பு புலனாய்வுக் குழு அதன் பணியினை செய்து வருகிறது. அதனடிப்படையில் தான் இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், இதோடு மட்டுமல்லாமல் அரசு அலுவலர்கள் யாரெல்லாம் இதில் தவறுதலாக சரிபார்க்காமல் ஒப்புதல் அளித்தார்களோ அவர்கள் மீதும் துறை ரீதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்கின்ற வகையில் மதுரை மருத்துவமனையைச் சேர்ந்த நிர்வாக அலுவலர் ஒருவர், இளநிலை நிர்வாக அலுவலர் ஒருவர், அலுவலக கண்காணிப்பாளர் இரண்டு பேர், இளநிலை உதவியாளர் ஒருவர், உதவியாளர் ஒருவர், தட்டச்சர் ஒருவர் என்று 7 பேர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் தவறு என்று எங்கு நேர்ந்தாலும் உடனடியாக கண்டறிந்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருந்தநிலையில் இதுபோன்ற தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இந்த குழு ஏற்கெனவே சொல்லியிருப்பது போல இதுமாதிரியான ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அருள் அவர்கள் சொன்னது போல பொருளாதார ரீதியிலான வளர்ச்சி ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கு ஏற்படுத்திடும் வகையில் நடவடிக்கைகளை இந்த அரசு ஏற்கெனவே செய்திருக்கும் காரணத்தினால்தான் பொருளாதார வளர்ச்சி 14 ஆண்டுகளுக்கு பிறகு இரட்டை இலக்க வளர்ச்சியாக தமிழ்நாட்டில் 11.19 என்கின்ற வகையில் பொருளாதார வளர்ச்சியும், தனிநபர் வருமான வளர்ச்சியும் வளர்ந்து இந்தியாவிற்கே தமிழ்நாடு முன்மாதிரியாக இருந்து வருகிறது, எனினும் ஏழ்மை நிலையில் உள்ள மக்கள் பாதிப்பு உணராமல் செய்கின்ற இதுபோன்ற காரணத்தினால் சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் என்பதையும் கடந்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி செய்துக் கொண்டிருக்கிறது என்பதை தங்களின் வாயிலாக அரசின் கவன ஈர்ப்பு தீர்மானம் வாயிலாக பேரவைத் தலைவருக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் சட்டப்பேரவையில் உரையாற்றினார்கள்.



ஈரோடு வடக்கு மாவட்டம், அந்தியூர் சட்டமன்ற தொகுதி தூக்கநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றியம் சார்பில் 640க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு அவர்களின் பணியினை பாராட்டி அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப புதிய ஆடைகள் மற்றும் இனிப்புகளை ஒன்றிய கழகச் செயலாளர் எம்.சிவபாலன் வழங்கினார். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் அம்மாப்பேட்டை சரவணன், ரவீந்திரன், அந்தியூர் தெற்கு நாகேஸ்வரன் உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2025) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தனிச் செயலாளர் மறைந்த கோ.சண்முகநாதன் அவர்களின் மனைவி திருமதி யோகம் சண்முகநாதன் அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன், துணை முதலமைச்சர் உயதநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மரு. நா.எழிலன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

# உதவிப் பேராசிரியர்கள் பணிக்குத் தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்!

## உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தகவல்!



சென்னை, அக்.18

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2,708 உதவி பேராசிரியர்கள் நிரந்தரமாக நிரப்பிட ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நேற்று முன்தினம் (16.10.2025) அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தகுதியுள்ளவர்கள் விண்ணப்பித்து பயன்பெறுமாறு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளதாவது:

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாக உள்ள 2,708 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பிட ஆணைகள் வெளியிடப்பட்டன. இது தொடர்பாக 07.10.2025 ஆம் நாளிட்ட அறிக்கையில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, நேற்று முன்தினம் (16.10.2025) ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. அதில் பாடவாரியான காலிப் பணியிட விவரங்கள், கல்வித் தகுதி, வயது மற்றும் விண்ணப்பம் செய்வதற்கான அனைத்து விவரங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. பணிநாடுநர்கள் ஏற்கனவே முந்தைய அறிவிப்பின் கீழ் விண்ணப்பித்திருந்தாலும் மீண்டும் தற்போதும் விண்ணப்பிக்க வேண்டும். இவர்கள் ஏற்கனவே தேர்வு கட்டணம் செலுத்தியுள்ளதால் தற்போது மீண்டும் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட் டுள்ளது.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை 17.10.2025 முதல் 10.11.2025 வரை இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். 20.12.2025 அன்று தேர்வு நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ், ஆங்கிலம், கணிதம், கணினி அறிவியல் மற்றும் பொருளியல் உள்ளிட்ட 61 பாடப்பிரிவுகளுக்கும் பாடவாரியாக தமிழ்நாடு இடஒதுக்கீட்டின் கீழ் காலிப்பணியிட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. சென்னை, மாநிலக் கல்லூரியில் உள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கற்பிக்க ஏதுவாக தமிழ் மற்றும் கணினி அறிவியல் பிரிவிற்கு 3 பணியிடங்கள் சிறப்பினமாக தேர்வு செய்யப்படவுள்ளது.

இந்த அறிய வாய்ப்பினை பணிநாடுநர்கள் பயன்படுத்திக்கொண்டு 10.11.2025க்குள் தங்களது விண்ணப்பத்தினை https://www.trb.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

## எஸ்.இராசரெத்தினம் வரவேற்புரை: வி.ஐ.டி. ஜி.விஸ்வநாதன் முன்னிலை!

# கவிஞர் எஸ்.கருணானந்தம் நூற்றாண்டு விழா - மலர் வெளியீடு!

## கி.வீரமணி தலைமை! கி.இராஜமாணிக்கம் – ம.இராசேந்திரன் பங்கேற்பு!

சென்னை, அக். 18-

கவிஞர் எஸ்.கருணானந்தம் நூற்றாண்டு விழா இன்று (18.10.2025) மாலை 5 மணிக்கு கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலக அரங்கத்தில் நடைபெறுகிறது.

இதில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை தாங்குகிறார். வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் ஜி. விஸ்வநாதன் முன்னிலை வகிக்கிறார்.

சிறப்புவிருந்தினர்களாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கி. இராஜமாணிக்கம், (ஓய்வு), தமிழ்நாடு அரசு. மேனாள் திட்டக்குழுத் தலைவர், பேராசிரியர் மு. நாகநாதன், மேனாள் துணைவேந்தர், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம். டாக்டர் ம.இராசேந்திரன், மேனாள் துணைவேந்தர், அழகப்பா பல்கலைக்கழகம் பேராசிரியர் அ.இராமசாமி,

மேனாள் துணைவேந்தர், எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம். டாக்டர் (மேஜர்) இராஜா, மேனாள் தமிழ்ப் பேராசிரியர், சென்னை மாநிலக் கல்லூரி. பேராசிரியர் மறைமலை இலக்குவனார், மேனாள் தமிழ்ப் பேராசிரியர், சர் தியாகராயா கல்லூரி, சென்னை முனைவர் இரா.மணியன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர்.

மாலை 05.30 மணி தமிழ்த்தாய் வாழ்த்து, கவிஞரின் கவிதை வாசிப்பு மூன்றாம் தலைமுறையினர், எஸ்.இராசரெத்தினம், (ஓய்வு) வரவேற்புரையாற்றுகிறார்.

கவிஞர் படைப்புகளின் தொகுப்பை வெளியிடுபவர் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, முதற்படி பெறுபவர் இராஜமாணிக்கம்,

மலரினை ஜி.விஸ்வநாதன் வெளியிடுகிறார். பெறுபவர் டாக்ர் ம.இராசேந்திரன், அண்ணா காவியம் ஆங்கில மொழி பெயர்ப்பு

டாக்டர் ம.இராசேந்திரன், அண்ணா காவியம் ஆங்கில மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பாளர் முனைவர் மறைமலை இலக்குவனார்

வெளியிடுபவர் பேராசிரியர் மு.நாகநாதன்,

பெறுபவர் ம.மதிவாணன், ஐ.ஆர்.எஸ். (முதன்மை வருமானவரி ஆணையர்) கவிஞர் கருணானந்தம் நினைவு கல்வி உதவித்தொகை வழங்குதல், கவிஞரின் சகோதரர் எஸ்.கந்தசாமி. சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சி தொகுப்பு சிவ. நாகநாதன் வழங்குகிறார். என். இராசகோபால் நன்றி கூறுகிறார்.

